# பத்திரிகைச் செய்தி

Ontario

**அட்டர்னி ஜெனரல்**
**அமைச்சகம்**

உடனடி வெளியீட்டுக்காக
26 ஏப்ரல், 2006

**மெக்கின்டி அரசு, ஒன்டாரியோவில் மனித உரிமைகள் பாதுகாப்பு முறைகளை வலுப்படுத்துகிறது**
*புதிய சட்டம் மனித உரிமைகள் அமைப்பை நவீனப்படுத்தும், பொதுமக்களுக்கு மேம்பட்ட சேவையை அளிக்கும்*

டொரோன்டோ - மெக்கின்டி அரசு புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துகிறது; இச்சட்டம் நிறைவேறினால், ஒன்டாரியோவில் மனித உரிமைகள் அமைப்பை வலுப்படுத்தும், மேம்படுத்தும், முன்னேற்றும், நடைமுறைப்படுத்துவதில் கூடுதல் பயன் தரும் என்று அட்டர்னி ஜெனரல் மைக்கேல் பிரையன்ட் இன்று அறிவித்தார்.

"மனித உரிமைகளை மேம்படுத்துவதிலும், பாகுபாடுகளை எதிர்ப்பதிலும், பாதிப்புக்கு ஆளாகக்கூடியவர்களை பாதுகாப்பதிலும் எமது அரசு உறுதி கொண்டுள்ளது" என்றார் திரு பிரையன்ட். "நவீனப்படுத்தப்பட்ட ஒன்டாரியோ மனித உரிமைகள் ஆணையம் (Ontario Human Rights Commission), பாகுபாடுகளைத் தடுப்பதில் முனைப்புக் காட்டி, மனித உரிமைகளை முன்னெடுத்துச் செல்வதில் உறுதியான அமைப்பாக இருக்கும்; அதே நேரத்தில், ஒன்டாரியோ மனித உரிமைகள் தீர்ப்பாயத்துக்கு (Human Rights Tribunal of Ontario) தனிநபர் பிரச்சினைகளை நியாயமாக, விரைவாக, பயனுள்ள வகையில் தீர்ப்பதற்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படும்" என்றார் அவர்.

உத்தேசிக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் சட்ட திருத்தச் சட்டம், (Human Rights Code Amendment Act) 2006இன்படி கீழ்க்கண்ட வழிகளில் ஒன்டாரியோ மனித உரிமைகள் அமைப்பு மேம்படுத்தப்படும்:

- செயல்முனைப்பு நடவடிக்கைகளின் மூலம் பாகுபாடுகளைத் தடுப்பதிலும், மக்கள் கல்வி, ஆய்வு மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் வகையிலும் ஒன்டாரியோ மனித உரிமைகள் ஆணையத்தின் பங்கை வலுப்படுத்தல்

- பாகுபாடுகளுக்கு எதிரான புகார்களை நேரடியாக ஒன்டாரியோ மனித உரிமைகள் தீர்ப்பாயத்திடம் முன்வைக்க அனுமதித்தல்: பேச்சுவார்த்தை, தீர்ப்பளித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் ஆகிய வழிகளில் பிரச்சினையை விரைவாகவும் பயனுள்ள வகையிலும் தீர்த்தல்

- தீர்ப்பாயத்திடம் நிவாரணம் கோரி வருபவர்களுக்கு தகவல், ஆதரவு, ஆலோசனை, உதவி மற்றும் சட்டரீதியான பிரதிநிதித்துவம் வழங்குவதற்காக புதிதாக மனித உரிமைகள் சட்ட ஆதரவு மையம் (Human Rights Legal Support Centre) ஒன்றை உருவாக்குதல்

…/2

- ஒன்டாரியோ மனித உரிமைகள் ஆணையத்துக்கு உள்ளேயே இனவாத எதிர்ப்பு செயலகம் மற்றும் ஊனமுற்றோருக்கான உரிமைகள் செயலகம் ஆகிய இரண்டு புதிய செயலகங்களை உருவாக்குதல்

“மனித உரிமைகளில் ஒன்டாரியோவை சர்வதேச அளவில் எப்போதும் தலைமையிடம் வகிக்கச் செய்கிற புதுப்பிக்கப்பட்ட அமைப்பை உருவாக்குவதில் நாங்கள் அரசுடன் இணைந்து செயல்படுவோம்,” என்றார் ஒன்டாரியோ மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் பார்பரா ஹால்.

“இந்தச் சட்டத்தின் மூலம் ஒன்டாரியோவாசிகள் தமது பிரச்சினைகளை விரைவாகவும், பயனுள்ள வகையிலும் தீர்த்துக் கொள்ள முடியும்,” என்றார் ஒன்டாரியோ மனித உரிமைகள் தீர்ப்பாயத்தின் தலைவர் மைக்கேல் கோத்தெய்ல். “இவற்றை நடைமுறைப்படுத்துவதில் அரசுடன் இணைந்து செயல்படுவதை நான் எதிர்நோக்குகிறேன்” என்றார் அவர்.

“மனித உரிமைகள் அமைப்பைத் திருத்துவதற்கான அட்டர்னி ஜெனரலின் சட்டத்தை நான் பாராட்டுகிறேன். மனித உரிமைக் குழுக்கள் மற்றும் சமூகக் குழுக்கள் இவற்றை நீண்ட காலமாகக் கோரி வருகின்றன. மனித உரிமைகளின்பால் அரசின் ஈடுபாட்டை நாங்கள் வரவேற்கிறோம்,” என்றார் எச்ஐவி மற்றும் எய்ட்ஸ் லீகல் கிளினிக் (ஒன்டாரியோ) அமைப்பின் செயல் இயக்குநர் ருத் கேரி.

“மனித உரிமைகள் அமைப்பில் மாற்றம் தேவை என பத்தாண்டுகளுக்கும் மேலாகக் கேட்கப்பட்டு வரும் கோரிக்கைகளின்படி நாங்கள் செயல்படுகிறோம். பொதுமக்களுக்கான சேவையை மேம்படுத்துவதையும், இந்தப் பகுதியில் மனித உரிகைளை முன்னெடுத்துச் செல்வதையும் இந்தப் புதிய சட்டம் உறுதி செய்யும்” என்றார் திரு பிரையன்ட்.

- 30 -

தொடர்புகள்:
கிரெக் க்ரோன் (Greg Crone)
அமைச்சு அலுவலகம் (Minister’s Office)
*(416) 326-1785*

பிரெண்டன் கிராலி (Brendan Crawley)
தொடர்புப் பிரிவு (Communications Branch)
*(416) 326-2210*

www.attorneygeneral.jus.gov.on.ca

இந்த ஆவணம் 14 மொழிகளில் கிடைக்கும்: www.attorneygeneral.jus.gov.on.ca

பொதுவான தொலைபேசி விசாரணைகள்: 416-326-2220 or 1-800-518-7901

பார்வைத்திறன் இழந்தவர்கள் மேற்குறிப்பிட்ட தொலைபேசி எண்களை அழைத்து, இந்த ஆவணத்தின் உரையைக் கேட்கலாம்.

தேவைப்படுவோருக்கு இந்த ஆவணம் பிரெயில் வடிவிலும் கிடைக்கும்.

TTY: 416-326-4012